மாண்புமிகு டாக்டர் எச. வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அப்படிப்பட்ட வாய்ப்புகள் அரசாங்கத்திற்குத் தரப்படுமானால் முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத தெரிவிததுக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ரூ. 10,000 கொடுததார்கள் ; 3 ஏக்கர் நிலம் கொடுததார்கள் என்று சொல்லுகிறார்கள். சேலம் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம் ; மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி. அவர்களால் அந்த அளவுக்கு கொடுத்த பிறகு, 2 ஏக்கர் நிலத்தை மக்களின் நல்வாழ்வைக் கருதி அரசாங்கததாலே விலை கொடுத்து இதைச் செய்யக் கூடாதா ? பின்தங்கிய பகுதியாக இருப்பதால், இவ்வளவுதான் அவர்களால் கொடுக்க முடியும் என்ற ஒரு நிலைமை வந்த பிறகு, 1970ஆம் ஆண்டு முதல் இன்றைக்கு 1982வரை அதாவது 12 ஆண்டுகள் காலம் தாழ்ததிக் கொண்டிருப்பதா ? அரசாங்கத்தின் சார்பிலே அங்கே மருத்துவமனை கட்டப்படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரத்துப்பட்டி தொகுதியைப் பொறுத்தவரையில் நல்ல முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் ஆனால், இதிலே எவ்வித பாரபட்சமும் இல்லை. அங்கே இருக்கக் கூடிய பிரச்னையெல்லாம், நில ஆர்ஜிதம் செய்வதைப் பற்றி நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்க வில்லை என்று எண்ணுகிறேன். 18—6—1970 அன்று ஆர். டி. ஓ. ஆர்ஜிதம் செய்ய வந்தபோது, அதிலே சில சிக்கல்கள் ஏற்பட்டது, நில ஆர்ஜிதம் என்றவுடன், அது அவ்வளவு இலேசான காரியமல்ல ; உடனே கோர்ட்டுக்குப் போய் விடுவார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். 5 ஏக்கர் நிலம் இருந்தால்தான் அங்கே மருத்துவமனை கட்ட முடியும். ஆனால், இப்போது அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிக் கொண்டு வருகிறது. குடும்பக் கட்டுப்பாடு கட்டிடத்தில் தற்போது இயங்கிக்கொண்டு வருகிறது. அதற்கென்று ஒரு மருததுவமனை இருக்க வேண்டுமென்பதற்காக 5 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, விரைவில் கட்டி முடிக்கப்படும்.

குழந்தைகளை தாக்கும் போலி நோய் :

* வினா எண்—574 **திரு. பம்பல் நல்லதம்பி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுததுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகளை தாக்கும் போலியோ எனப்படும் நோய் சென்னை நகரிலிருந்து, கிராமப் பகுதிகளுக்கும் பரவி வருவதை அரசு அறியுமா ?

1982 மார்ச் 20]

(ஆ) கிராமப் பகுதிகளில் பரவாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மாவட்ட சுகாதார அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி சென்னையிலிருந்து கிராமப்பகுதிகளில் இந்நோய் பரவுவதாக எந்தவித ஆதாரமும் இல்லை.

(ஆ) இந்நோய் கிராமப் பகுதிகளுக்கு பரவாமல் தடுக்க ஏற்கனவே தேவையான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 0—2 வயது குழந்தைகளுக்கு போலியோ வராமல் தடுக்கும் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மற்றும் நகராட்சி அலுவலகங்களிலும் உள்ள சுகாதார அலுவலர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இந்த போலியோ தடுப்பு மருந்து தனிப்பட்ட சிலரால் செய்தாலும், அரசு மருத்துவமனைகளிலே அதை எல்லாக் குழந்தைகளுக்கும் செய்வதில்லை. தவிர, இப்படிப்பட்ட போலியோ காய்ச்சல் வந்தால், அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்ச்சல் வந்தால் உடனடியாக அந்த வாக்சின் கொடுத்தால் பயனில்லை. அது மட்டுமல்ல. காய்ச்சல் வந்தால் வேறு வைத்தியம் செய்யவேண்டும். போலியோ ஓரல் வாக்சின் கொடுத்தால், அந்தக் குழந்தைக்கு சில குறிப்பிட்ட தினங்களுக்குப் பிறகுதான் இம்மியூனிசேஷன் வரும். போலியோ ஊசி போட்டால் 6 வாரங்கள் ஆகும். அதேபோல் டைபாய்டு ஊசி போட்டால் 15 நாட்களுக்குப் பிறகு இம்யூனிசேஷன் வரும். ஆகவே, உடனடியாக அதை செய்யக் கூடாது. காய்ச்சல் வந்தவுடன், அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து, சிகிச்சை செய்ய வேண்டும் என்று எல்லா இடங்களிலும் இருக்கக் கூடிய டாக்டர்களுக்கு சொல்லியிருப்ப தோடு மட்டுமல்லாமல், எப்படி உடனடியாக கவனிக்க வேண்டும் என்பதற்கு பீடியாட்ரிக் துறை மூலம் அதற்கான இன்ஸ்ட்ரக் ஷனையும் அறிவித்திருக்கிறோம். அடுத்து, முன்பெல்லாம் இருந்ததை விட இப்போது பல மடங்கு தீவிரப்படுததி, நிறைய வாக்சின்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான புள்ளி விவரங்களையெல்லாம் மானிய கோரிக்கையிலேகூட எடுததுச் சொன்னேன்.

[1982 மார்ச் 20

(முற்பகல் 9·50)

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, குழந்தைபிறந்த இவ்வளவு நாட்களில் கட்டாயமாக அம்மை குதத வேண்டுமென்று தண்டோரா போடுவதுபோன்று சிறு குழந்தைகளுக்கு போலியோ நோய் ஆரம்பத்திலேயே தடுக்கப்படுவதற்கு ஏற்ற முறையிலே தண்டோரா போட்டு தடுப்பு ஊசி போடச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் திரு. எச். வி. ஹண்டே : நம் முன்னாலே உள்ள பிரச்சினையெல்லாம் போலியோ வேக்சின் அத்தனையும் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய தேவையிலே 30 சதவீதம், 25 சதவீதம் தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது, அரசாங்கத்திற்கு 25 சதவிதமும் தனியார்கள் கொஞ்சம் வரவழைக்கக் கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே தண்டோரா போட்டு செய்ய வேண்டியதில்லை. இருக்கக்கூடிய குழந்தைகளை ஐடன்டிபை பண்ணி ஆங்காங்கே ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக செய்யப்பட்டு வருகிறது. சில மாவட்டங்களிலே நாம் இந்தப் பணியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். திருச்சி மாவட்டத்திலே எல்லா குழந்தைகளுக்கும் கிராஷ் புரோகிராமாக போட்டு முடிக்கப்பட்டு வருகிறது. உடனடியாக எல்லா மாவட்டங்களிலும் கிடைக்கக்கூடிய வேக்சின் அததனையும்பயன்படுத்தப் பட்டு வருகிறது. இன்னும் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கததிற்கு எழுதிக் கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். டி. உகும்சந்த் : தனியார்கள் போலியோ தடுப்பு ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்த விரும்பினால் அரசு அதற்கு அனுமதிக்குமா ? அதற்கு உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச. வி. ஹண்டே : போலியோ தடுப்பு மருந்து கொடுப்பதற்கு பெரிய அமைப்புத் தேவையில்லை. தனியார் மருததுவ மனைகளிலே, டிஸ்பன்சரியிலே கூட கொடுக்க முடியும். தனியாக வரவழைத்துக் கொடுததுக் கொண்டிருக்கிறார்கள். சென்னையிலே ஜெயின் அசோசியேஷன் போன்ற அசோசியேஷன்கள் போலியோ வேக்சின் கொடுக்கிற நிலை இருக்கிறது. தனியார்கள் இலவசமாக கொடுக்க முன்வந்தால் வாங்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.